FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319430

1. District : Coimbatore PS: Vigilance and Anticorruption Year: 2026 FIR No.: 12/2026/DE/CB Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 18/7/2026

2. (i) Act சட்டம்: 7 of Prevention of corruption Sections பிரிவுகள்: –
(ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: – Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : Date from : 17/7/2026 Date to : –
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Before 1700 hr Time to : –
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 18.07.2026 Time : 1600 hr
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol-2 Time : 1600 hr.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : computer typed in Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North Taluk office Coimbatore about 8 km South east
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Balasundaram road Coimbatore.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. Sangeetha (b) Father's/ Husband's Name : V. Sahibiral
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 48/2026 (d) Nationality : Indian (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : DY. Inspection call officer / Tahsildar (g) Address : District inspection cell office Collectorate campus Coimbatore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) D.S. manikandan Zonal DY North Taluk, Coimbatore. 2) A. Kumaraganesan OA, North Taluk, Coimbatore, 3) R. Eliyakkarakki, Special Revenue Inspector O/o ARO circle 2, Coimbatore 4) B. Gokulnath, Taluk Engineer North Taluk, Coimbatore. 5) K. Kalpana, VPO, Vellakinar village, North Taluk, Coimbatore. 6) S. Karupusamy, Sergeant, Rationship, Godwins Police SCAB-NO 3 APO 1 Py, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted
Before the Honorable Principle District and Sessions Judge
Coimbatore
Separate Sheet enclosed herewith.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/7/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.07.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

G. Arumugam
Name: பெயர் Inspector of police
Rank: நிலை V.S.I/...No. எண் .....
Coimbatore

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

In continuation of FIR (C 8319430) in Coimbatore V&AC Cr.No.12/2026/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

இன்று 18.07.2026 ஆம் தேதி 16.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.ஆறுமுகம் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புனர், திருமதி.T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.115/2026/ஐ1, நாள்: 18.07.2026, அய்யா, பொருள்: திடீர் ஆய்வு – கோயம்புத்தூர் மாவட்டம் – கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் – திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது – மேல் நடவடிக்கைக்காக புகார் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அளித்தல் – சம்மந்தமாக. கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், மண்டல வட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள் ஆகியோர்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஜாதிசான்றிதழ், வாரிசு சான்றிதழ், பொருளாதரத்தில் பின்தங்கியோர், சான்றிதழ் அடுகுகடை உரிமம் மற்றும் உரிமத்தை புதுபித்தல், கட்டிட உரிமம், சால்வென்சி, குடும்ப அட்டை வழங்குதல், மாதாந்திர ஓய்வு ஊதியம், நில உரிமை சான்று, பட்டா மாறுதல், இலவச வீட்டுமனை பட்டா வழங்குதல், ஒரு வருடத்திற்கு மேலான இறப்புச்சான்றிதழ், வருமானச் சான்று, முதல் பட்டதாரி சான்று இதர பிற்பட்ட வகுப்பினர் சான்று, விதவை சான்று, ஆதரவற்றோர் விதவை சான்று மற்றும் இதர வேலைகளுக்கு [illegible] மக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும், [illegible] மற்றும் Paytm மூலமாகவும் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் கோவை துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர் ஆகிய நானும் கோவை ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புப் பிரிவு ஆய்வளார் திரு.G.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 17.07.2026 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு புறப்பட்டு சென்று கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் கூட்டு தணிக்கை அன்று மாலை 17.00 மணி முதல் மறுநாள் 18.07.2026 ஆம் தேதி அதிகாலை 04.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு. மேற்படி அலுவலகத்தில் இருந்த

அலுவலக பணியாளர்களின் கைபேசிகளில் பண பரிவர்த்தனை சம்பந்தமாக ஒவ்வொரு அலுவலர்களின் கைபேசிகள் ஒன்றன்பின் ஒன்றாக சோதனை செய்யப்பட்டது. அப்போது அங்கிருந்த திரு.மணிகண்டன், மண்டல துணை வட்டாட்சியா. வடக்கு தாலுக்கா, கோவை என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த 20 நாட்களாக பணிபுரிந்து வருவதாகவும், அவருடைய பணியானது இணைய வழி சான்றிதழ்கள் (சாதி சான்று, வருமானச்சான்று), இணைய வழி பட்டா மாறுதல், நில உரிமை மாற்றும் நில ஒப்படைப்பு ஆகிய பணிகள் எனவும் தெரிவித்தார். அவரிடம் அவரின் செல்போனை கேட்க, தான் பயன்படுத்தி வரும் Vivo 29-E என்ற செல்போனை ஆஜர் செய்தார். அவர் முன்னிலையில் மேற்படி செல்போனில் இருந்த G-Pay கணக்கு பார்வையிடப்பட்டது. மேற்படி கணக்கு 7094507686 என்ற கைபேசி எண்ணில் manikandanrimtp@okicici என்ற UPI.ID-ல் இருந்தது மேற்படி G-Pay-ல் 6 சந்தேகத்திற்கு இடமான பணம் பரிவர்த்தனைகள் மொத்தம் ரூ.42,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனைகளில் திரு.மணிகண்டன், மண்டல துணை வட்டாட்சியர் என்பவரின் வங்கி கணக்கில் பணம் வரவாகியுள்ளது சம்பந்தமாக அவரை விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரனாகவும், முகாந்திரம் இன்றியும் பதில் கூறினார். மேலும் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.குமாரகணேசன் அலுவலக உதவியாளர், வடக்கு தாலூக்கா அலுவலகம், கோவை என்பவரை விசாரிக்க, கடந்த 2 மாதமாக பணிபுரிந்து வருவதாகவும், வட்டாட்சியர் அவர்களுக்கு உதவியாக அலுவலக பணிகள் செய்வது தன்னுடைய பணியாகும் என்று தெரிவித்தார். அவரிடம் செல்போனை ஆஜர் செய்ய சொல்ல அவர் தன்னுடைய Vivo Y56 5G செல்போனை ஆஜர் செய்தார். அவர் முன்னிலையில் மேற்படி செல்போனில் இருந்த G-Pay கணக்கு பார்வையிடப்பட்டது. மேற்படி கணக்கு 6381480670 என்ற கைபேசி எண்ணில் kumaraganeshan76@oksbi என்ற UPI.ID-ல் இருந்தது மேற்படி G-Pay-ல் 11 சந்தேகத்திற்கு இடமான பணம் பரிவர்த்தனைகள் மொத்தம் ரூ.1,27,000/– பெறப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அலுவலக உதவியாளர் திரு.குமரகணேசன் என்பவரை விசாரிக்க, இன்று திருமதி.கோகிலம் க/பெ.கோபாலகிருஷ்ணன் என்பவர் தனது மகள் செல்வி.லயா என்பவருக்கு கடந்த 13.07.2026-ம் தேதி Linguistic Minority சான்று கோரி விண்ணப்பித்து இன்று 17.07.2026-ம் தேதி மேற்படி சான்று பெற்றதற்கு கையூட்டாக ரூ.500/- பெற்றுக்கொண்டதாகவும், அதே போல் திரு.முரளி என்பவர் தனது மகள் செல்வி.ஜெனிப்பர் கிஃப்டா என்பவருக்கு Religious Minority சான்று பெறுவதற்காக கடந்த 09.07.2026-ம் தேதி சான்று கோரி விண்ணப்பித்து இன்று 17.07.2026-ம் தேதி மேற்படி சான்று பெற்றதற்கு கையூட்டாக ரூ.500/- பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். மேற்படி பணத்தை அவர் கேட்கவில்லை எனவும், மேற்கண்ட இரண்டு பேரும் அவர்களாகவே தன்னுடைய நம்பரை வாங்கிக்கொண்டு பணம் ரூ.500/-ஐ

அனுப்பி வைத்ததாக தெரிவித்தார். மேலும் மற்ற பரிவர்த்தனைகள் குறித்து கேட்க, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். பின்னர் மேற்படி அலுவலகத்தில் இருந்த திரு.கருப்புசாமி, த/பெ.சத்தியசீலன், விற்பணையாளர், நியாயவிலைகடை, கோல்டு வின்ஸ், கதவு எண்.135/210, ஏ.டி.காலனி, பீளமேடு, கோவை என்பவரிடம் பணம் குறித்து கேட்க அவர், தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து தனித்தனியாக மடித்துவைத்திருந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றில் ஒன்றில் ரூ.2,600/-ம் மற்றொன்றில் ரூ,5,000/- என மொத்தம் ரூ.7,600/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க மேற்படி பணத்தில் ரூ.2,600/- தான் பணிபுரியும் கடையின் அன்றைய விற்பனைத்தொகையில் ஒரு பகுதி என்றும் மற்றொரு தொகைகுறித்து விசாரிக்க அவர் முதலில் தனது சொந்தபணம் என்றும் பின்னர் தனது தாயாரின் மருத்துவ செலவிற்காக கொண்டுவந்திருந்த பணம் என்றும் முன்னுக்கு பின் முரணாக மாற்றி மாற்றி பதிலளித்தால் மேற்படி பணம் ரூ.5,000/- (500 X 8 = 4000, 200 X 5 = 1000) ஆனது இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அலுவலகர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி விற்பனைத்தொகையான ரூ.2,600/- அரசுக்கு செலுத்தவேண்டிய தொகை என்பதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடாந்து உதவி பங்கீட்டு அலுவலர் சரகம்-I அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.இளையபாரதி மற்றும் தனிவட்டாட்சியர் (குடிமைப் பொருள்), செல்போனை வாங்கி அவற்றிலிருந்த G-Pay App-லிருந்த பணபரிவர்தனைகளை பார்வையிட்டதில் அதில் திரு.இளையபாரதி என்பவரின் GPay எண் 9944594989-க்கு கடந்த ஜனவரி 2026 முதல் 17.07.2026-ம் வரையிலா காலகட்டதில் சுமார் 39 எண்ணிக்கையிலான ரூ.33,150/-க்கான பணப்பரிவர்தனைகள் காணப்பட்டது. மேற்கண்ட பணப்பரிவர்தனை குறித்து திரு.இளையபாரதி என்பவரிடம் கேட்க அவைகள் அனைத்தும் தான் இவ்வலுவலகத்தில் பணிக்கு சேர்ந்தநாள் முதல் தனது அலுவல அதிகார வரம்பிற்குட்பட்ட நியாயவிலைக்கடைகளின் விற்பனையாளர்களிடமிருந்தும் அலுவல் ரீதியாக தனக்கு தெரிந்த சில புரோக்கர்களிடமிருந்தும் GPay மூலம் தனக்கு அனுப்பப்பட்ட தொகைகள் எனவும் தெரிவித்தார். மேற்படி பரிவர்தனைகளின் மூலம் பெறப்பட்ட தொகைகள் அனைத்தும் லஞ்சப்பணம் என்று தெரியவருகிறது. அதனைத்தொடர்ந்து அங்கிருந்த கோவை வடக்கு அலுவலகத்தில் களப்பொறியாராக பணிபுரியும் B.கோகுல்நாத் என்பவரின் GPay எண்.8667068627-க்கு உண்டான பணபரிவர்தனைகளை பார்வையிட்டதில் அதில் கடந்த 02.01.2026 முதல் 17.07.2026 வரையிலான காலகட்டதில் சுமார் 564 எண்ணிக்கையிலான ரூ.5,69,420/- க்கான பணப்பரிவர்தனைகள் காணப்பட்டது. மேற்கண்ட பணப்பரிவர்தனை குறித்து B.கோகுல்நாத் என்பவரிடம் கேட்க அவைகள் அனைத்தும் தான் இவ்வலுவலகத்தில்

பணிக்கு சேர்ந்தபின் கடந்த 2026-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் இதுநாள் வரை தனது அலுவல அதிகார வரம்பிற்குட்பட்ட நியாயவிலைக்கடைகளின் விற்பனையாளர்களிடமிருந்தும், இ-சேவை மையத்தில் பணிபுரியும் நபர்களிடமிருந்தும் மற்றும் Common Service Centre-களில் பணிபுரியும் நபர்களிடமிருந்து குடிமைப்பொருள் வழங்கல் தொடர்பாக எழும் குறைகளை சரிசெய்து கொடுத்தற்காக GPay மூலம் தனக்கு அனுப்பப்பட்ட தொகைகள் எனவும் தெரிவித்தார். மேற்படி பரிவர்தனைகளின் மூலம் பெறப்பட்ட தொகைகள் அனைத்தும் லஞ்சப்பணம் என்று தெரியவருகிறது.அதனை தொடர்ந்து நில அளவை பிரிவு அலுவலகத்தில் அமர வைக்கப்பட்டிருந்த கோவை வடக்கு தாலூக்கா, வெள்ளகிணறு கிராமம், கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கல்பனா அவர்களின் செல்போனில் இருந்த Paytm பணபரிவர்தனைகளை பார்வையிட்டதில் அதில் கடந்த 03.09.2025 முதல் 04.07.2026 வரையிலான காலகட்டதில் சுமார் 19 எண்ணிக்கையிலான ரூ.2,17,000/- க்கான பணப்பரிவர்தனைகள் காணப்பட்டது. மேற்படி பணம் பரிவர்தணையை பற்றி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கல்பனா அவர்களிடம் விசாரிக்க அவர் தான் கடந்த 01.07.2026 ஆம் தேதி முதல் வெள்ளகிணறு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், அதற்கு முன்பு கடந்த 01.07.2025 முதல் 30.06.2026 வரை நம்பர் 24 வீரபாண்டி கிராமத்தில் பணிபுரிந்து வந்ததாகவும், அப்போது அவருக்கு கிராம உதவியாளர்கள் யாரும் இல்லாததால், அந்த கிராமத்தில் கடந்த 10 வருடமாக கிராம நிர்வாக அலுவலருக்கு உதவியாக இருந்து வந்த திரு.ரங்கராஜ் என்பவர் தனக்கும் அங்கு பணிபுரிந்த காலத்தில் அலுவல் நிமித்தமாக உதவியாக இருந்து வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரிடம் ரங்கராஜ் என்பவருடன் ஏற்பட்ட Paytm ல் பணம் பரிவர்த்தனை பற்றி விசாரிக்க முதலில் அவர் ரங்கராஜ் அவர்களுக்கு வாகனம் வாங்குவதற்காக பணம் ரூ.40,000/– கொடுத்ததாவும், பின்பு ரங்கராஜ் அவர்களுக்கு பணமாக கடன் கொடுத்தாகவும், அதனை அவர் திருப்பி G-pay மூலம் தனது Paytm ல் திருப்பி கொடுத்ததாகவும், பின்பு தன்னுடைய கணவர் தனது செலவிற்காக கொடுக்ககூடிய பணத்தை அவரிடம் கொடுத்து தன்னுடைய வங்கி கணக்கில் G-pay மூலம் போட சொன்னதன் பேரில் ரங்கராஜ் அவர்கள் போட்ட பணம் என்று தெரிவித்தார். இவ்வாறாக அவர் செல்லும் பதில் முன்னுக்கு பின் முரனாக இருந்தால் மேற்படி G-pay மூலம் அவாது கணக்கில் ஏற்பட்ட பணம் பரிவர்த்தனைகள் லஞ்சபணமாக தான் இருக்ககூடும் என்று கருதி மேல் விசாரணக்கு எடுத்துகொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட மொத்தம் பணம் ரூ.5,000/–. மேலும் G-pay / Paytm மூலம் லஞ்சமாக பணம் பரிவர்தனை செய்யப்பட்டதாக இருக்ககூடும் என கருதி கண்டுபிடிக்கப்பட்ட மொத்த பணம் ரூ.9,88,570/– ஆகும். இது சம்மந்தமாக திடீர் ஆய்வு நடவடிக்கைகள்

தயாரிக்கப்பட்டது. திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் பணம் ரூ.5,000/–, 11 வாக்குமூலங்கள், திடீர் ஆய்வு நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் சம்மந்தமாக 1) திரு.S.மணிகண்டன், மண்டல துணை வட்டாட்சியர், வடக்கு தாலூக்கா, கோவை, 2) திரு.A.குமரகணேசன், அலுவலக உதவியாளர், வடக்கு தாலூக்கா அலுவலகம், கோவை, 3) திரு.R.இளையபாரதி, வருவாய் ஆய்வாளர், வடக்கு தாலூக்கா அலுவலகம், 4) திரு.B.[illegible]த், தாலூக்கா பொறியாளர், வடக்கு தாலுகா, கோவை, 5) திருமதி.K.கல்பனா, [illegible]சர்வணக்குமார், கிராம நிர்வாக அலுவலர், வெள்ளகிணறு கிராமம், வடக்கு தாலுகா, கோவை, 6) திரு.S.கருப்புசாமி, த/பெ.சத்தியசீலன், விற்பணையாளர், நியாயவிலைகடை, கோல்டு வின்ஸ், கதவு எண்.135/210, ஏ.டி.காலனி, பீளமேடு, கோவை ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 18/7/2026 (T.சங்கீதா) துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். இணைப்பு– 1) திடீர் ஆய்வு நடவடிக்கை, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,000/–, 3) பதிவு செய்யப்பட்ட 11 வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் நகல்கள். Sir, Received the complaint along with Proceeding, Statements, Photo Copy of documents and Cash of Rs.5,000/- on 18.07.2026 at 16.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.12/2026/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 18.07.2026 at 18.00 hrs. (Sdxxxxx) 18/07/2026 (G.ARUMUGAM), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் ஆய்வு நடவடிக்கைகள், வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,000/- ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

18/7/2026

(G.ஆறுமுகம்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோவை.